சேலம் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு.கே.எஸ்.சிவகுமார்.,எம்.ஏ.,

ந.க.அ5/7469 /2021 நாள்: 29.10.2021

பொருள்: பொதுப்பணி – நில அளவைப் பதிவேடுகள் துறை – அமைச்சுப்பணி – சேலம் மாவட்டம் - திருமதி.க.சுகுணா க/பெ.R.குமார்(லேட்) என்பவருக்கு கருணையின் அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டது – இளநிலை உதவியாளர் இனத்தில் பணிவரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை:
1) இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.அ5/800/2018 நாள்:30.05.2020.
2) அரசாணை(3டி) எண்:118, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பணிகள் அலகு, பணி9(1) பிரிவு, நாள்: 22.10.2021.

*****

ஆணை:

சேலம் மாவட்ட நில அளவை அலுவலக உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் புல உதவியாளராக பணிபுரிந்த போது 15.11.2017 அன்று காலமான R.குமார் என்பவரின் மனைவி திருமதி.க.சுகுணா என்பவர் பார்வை 1ல் காணும் உத்தரவுப்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு 01.06.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 2ல் காணும் அரசாணையில் இவ்வலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகப் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.க.சுகுணா என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில், அவர் பணியில் சேர்ந்த நாளான 01.06.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 2ல் காணும் அரசாணையின்படி இம்மாவட்டத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகப் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.க.சுகுணா என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 01.06.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

29/10/21

உதவி இயக்குநர்
மாவட்ட நில அளவை அலுவலகம்
சேலம்

பெறுநர்:
திருமதி.க.சுகுணா,
இளநிலை உதவியாளர்
மாவட்ட நிலஅளவை அலுவலகம், சேலம்.

நகல்: சென்னை-5, நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: சென்னை-5, நில அளவைப் பதிவேடுகள் துறை, கூடுதல் இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: கோவை-18, நில அளவைப் பதிவேடுகள் துறை, மண்டல துணை இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: பணிப்பதிவேட்டிற்கு.
நகல்: உதவி இயக்குநர் மேஜைக்கு.
நகல்: இருப்பு கோப்பிற்கு.
நகல்: உபரி 5.

Scanned by CamScanner